

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.5.2023) ஜப்பான் நாட்டின் ஒசாகாவில் அமைந்துள்ள கோமாட்சு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## திருக்கோயில்களுக்குச் சொந்தமான

# ரூ. 55 கோடி மதிப்பீட்டிலான சொத்துகள் மீட்பு!

சென்னை, மே 28-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில் களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அதன்படி நேற்று (26.05.2023) சென்னை, மயிலாப்பூர், நடுக்குப்பம், அருள்மிகு பயண்டியம்மன் திருக் கோயில் மற்றும் கோவை மாவட்டம், தெலுங்குபாளையம், அருள்மிகு சென்றாயப்பெருமாள் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.55 கோடி மதிப்பீட்டிலான சொத்துக்கள் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளன.

சென்னை, மயிலாப்பூர், நடுக்குப்பம், பயண்டியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமாக ரூ.15 கோடி மதிப்பீட்டிலான 8,000 சதுரடி பரப்பிலான இடம் சாந்தோம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த இடத்தை வாடகைக்கு பெற்றிருந்த டாக்டர் ஜுபாய் என்பவர் நீண்ட காலமாக வாடகை செலுத்தாமலும், உள்வாடகைக்கு விட்டிருந்ததாலும் சென்னை இணை ஆணையர் மண்டலம் 2 அவர்களிடம் சட்டப்பிரிவு 78ன் படி சென்னை மாவட்ட உதவி ஆணையர் எம். பாஸ்கரன் அவர்கள் முன்னிலையிலும்,

கோவை மாவட்டம், தெலுங்குபாளையம், சென்றாயப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம், பேரூர் வட்டம், வீரகேரளம் கிராமத்தில் ரூ.40 கோடி மதிப்பீட்டிலான 4.50 ஏக்கர் நிலம் இரு நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது. கோவை மண்டல இணை ஆணையர் அவர்களின் சட்டப் பிரிவு 78ன் படி கோவை உதவி ஆணையர் சி.கருணாநிதி அவர்களின் முன்னிலையிலும், காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் இன்று அச்சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் தற்போதைய சந்தை மதிப்பு சுமார் ரூ.55 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள், தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்), ஆய்வர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டின் மீனவக் குடும்பங்களுக்கு

# மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகை ரூ.5000 வழங்கல்!

### தமிழ்நாடு அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை!

சென்னை, மே 28-

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கிழக்குக் கடற்கரை பகுதியில் ஏப்ரல் 15ஆம் நாளன்று தொடங்கி ஜுன் 14ஆம் நாள் வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜுன் 1ம் நாளன்று தொடங்கி ஜுலை 31ஆம் நாள் வரையிலும் 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மீன்பிடி தடைக்காலத்தின் போது மீன்பிடி விசைப் படகுகள்/ இழுவலைப்படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் முழு நேர மீன்பிடிப்பினை சார்ந்த மீனவ குடும்பங்கள் முற்றிலுமாக தொழிலின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் மீனவர்கள் தங்களது குடும்பத்தினை சிரமமின்றி நடத்திச் செல்ல குடும்பம் ஒன்றுக்கு தலா ரூ.5000 வீதம் மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது.

நடப்பாண்டிற்கான (2023ஆம் ஆண்டு) மீன்பிடி தடைக்காலத்தில் தமிழகத்தில் உள்ள 14 கடலோர மாவட்டங்களில் உள்ள 1.79 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடிதடைக்கால நிவாரணத் தொகை ரூ.5000 வீதம் வழங்கிடும் பொருட்டு ரூபாய் 89.50 கோடி அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 14 கடலோர மாவட்டங்களை சேர்ந்த மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை நேற்று முன்தினம் (26.05.2023) முதல் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைத்திடும் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

## ஒன்றிய அமைச்சர்

# நிதின் கட்கரி பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, மே 28-

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களின் பிறந்த நாளையொட்டி அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**திரு. நிதின் கட்கரி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**அவர் எப்போதும் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## மெரினா கடற்கரை பகுதியில் போக்குவரத்து மாற்றம்!

சென்னை, மே 28-

சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

அனைத்து சனி, ஞாயிற்று கிழமைகள் மற்றும் அரசு விடுமுறை நாட்களையொட்டி மாலை நேரத்தில் மெரினா கடற்கரைக்கு ஏராளமான பொதுமக்கள் வந்து செல்கின்றனர். இது தொடர்பாக சூழ்நிலைக்கு தகுந்தவாறு இன்று முதல் கீழ்க்கண்ட போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. காமராஜர் சாலையில் பொதுமக்கள் அதிகமாக கூடும் நேரம் வரை எவ்வித போக்குவரத்து மாற்றம் செய்யப்பட மாட்டாது.

கலங்கரை விளக்கத்தில் இருந்து வரும் வாகனங்கள் கண்ணகி சிலையில் திருப்பப்பட்டு பாரதி சாலைபெல்ஸ் ரோடுவாலாஜா சாலை வழியாக அண்ணா சாலை சென்று தங்களது இலக்கை அடையலாம். ரத்னா கபேயில் இருந்து வரும் வாகனங்கள் வாலாஜா சாலைபாரதி சாலை சந்திப்பில் திருப்பப்பட்டு பெல்ஸ் ரோடு சென்று அண்ணாசாலை அல்லது உழைப்பாளர் சிலை வழியாக சென்று தங்களது இலக்கை அடையலாம். ரத்னா கபேயில் இருந்து வரும் வாகனங்கள் நேராக கண்ணகி சிலைக்கு செல்ல அனுமதிக்கப்படாது. அண்ணாசாலையில் இருந்து வரும் வாகனங்கள் வாலாஜா சாலைபெல்ஸ் சாலை சந்திப்பில் பெல்ஸ் ரோடு நோக்கி செல்ல அனுமதிக்கப்படாது. (பெல்ஸ் சாலை ஒரு வழிப்பாதையாக மாற்றப்படும்) நேப்பியர் பாலத்தில் இருந்து வரும் வாகனங்கள் உழைப்பாளர் சிலை சந்திப்பில் வலதுபுறம் திரும்ப அனுமதிக்கப்படாமல் நேராக கண்ணகி சிலை சென்று வலது புறம் திரும்பி பாரதி சாலை பெல்ஸ் ரோடு வாலாஜா சாலை வழியாக அண்ணா சாலை சென்று தங்களது இலக்கை அடையலாம்.

## 'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!








நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில்

திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.1743.62 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மற்றும் ரூ.7.37 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் தொடக்க விழா

நாள் : 28.05.2023 நேரம் : காலை 9.30 மணி

இடம் : MVM நகர், திண்டுக்கல் | கொல்லப்பட்டி ஒட்டன்சத்திரம் புறவழிச்சாலை | கன்னிவாடி பேருந்து நிலையம்

புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைப்பவர்

திரு. கே.என். நேரு அவர்கள்
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

முன்னிலை

திரு. இ. பெரியசாமி அவர்கள்
மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

திரு. அர. சக்கரபாணி அவர்கள்
மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர்

அடிக்கல் நாட்டப்படும் திட்டப் பணிகள்
- ரூ. 132.32 கோடி மதிப்பீட்டில் 6 பேரூராட்சிகள் மற்றும் 636 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ. 3.9 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவு மையம் (FSTP Plant).
- ரூ.1553.85 கோடி மதிப்பீட்டில் 2 பேரூராட்சிகள் மற்றும் 7 ஒன்றியங்களில் உள்ள 1,366 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ரூ.53.55 கோடி மதிப்பீட்டில் சித்தையன்கோட்டை மற்றும் நிலக்கோட்டை பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப்பணிகள்.

தொடங்கி வைக்கப்படும் திட்டப்பணிகள்
பேரூராட்சிகள்
- ரூ. 5.90 கோடி மதிப்பீட்டில் கன்னிவாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம்.

தேனி மாவட்டத்தில் ரூ.32.01 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மற்றும் ரூ. 109.65 கோடியில் முடிவுற்ற திட்டப் பணிகள் தொடக்க விழா

நாள் : 28.05.2023 நேரம் : மாலை 3.00 மணி

இடம் : நகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் CPA கல்லூரி அருகில், போடிநாயக்கனூர்

புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைப்பவர்

திரு. கே.என். நேரு அவர்கள்
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

முன்னிலை

திரு. இ. பெரியசாமி அவர்கள்
மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

அடிக்கல் நாட்டப்படும் திட்டப்பணிகள்
- ரூ. 32.01 கோடி மதிப்பீட்டில் ஆண்டிப்பட்டி மற்றும் மேலசொக்கநாதபுரம் பேரூராட்சிகளில் குடிநீர் திட்டப்பணிகள்

தொடங்கி வைக்கப்படும் திட்டப்பணிகள்
நகராட்சிகள்
- ரூ. 2.5 கோடி மதிப்பீட்டில் போடிநாயக்கனூர் நகராட்சியில் வணிக வளாகம்.
- ரூ. 106.15 கோடி மதிப்பீட்டில் போடிநாயக்கனூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

பேரூராட்சிகள்
- ரூ. 1 கோடி மதிப்பீட்டில் தேவதானப்பட்டியில் சந்தை பணிகள்.

மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.
இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாநகராட்சி ஆணையர், அரசு அலுவலர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் பங்கேற்பார்கள்.

சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

செமதொஇ/565/வரைகலை/2023